பக்கங்கள்: 12

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 19 வெள்ளிக்கிழமை 02.05.2025 கதிர் 174

## இனி அது ரகசியம் அல்ல!

அரசியல் தீர்வு, புதிய அரசமைப்பு முயற்சி என்பவற்றை முன்வைத்து தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்புடன் தமிழ்க் கட்சிகள் பேணி வந்த கொஞ்ச நஞ்ச 2

# காணி சுவீகரிப்பை எதிர்த்து இன்று வெற்றிலைக்கேணியில் சந்திப்பு

### காணி உரிமையாளர்கள் ஒன்று திரள்கின்றனர்

யாழ்ப்பாணம் முதல் முல்லைத்தீவு வரையில் உள்ள கரையோரங்களில் சுமார் 6 ஆயிரம் ஏக்கர் காணிகளை அரசுடமையாக்குவதற்காக ஆளும்தரப்பு விடுத்துள்ள வர்த்தமானி அறிவிப்பை எதிர்த்து வெற்றிலைக்கேணியில் இன்று காலை 1-0 மணிக்கு காணி உரிமையாளர்கள் ஒன்று திரள்கின்றனர். அவர்களை ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் தலைமையிலான சட்டத்தரணிகள் குழு ஒன்று நேரில் சந்தித்து அரசின் நடவடிக்கைகளுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயவுள்ளது.

ஆளும்தரப்பு சுவீகரிப்பதாக அறிவித்துள்ள காணிகளில் தனியார் காணிகள் பெருமளவிலானவையும் அடங்கியுள்ளன. அவற்றில் பல காணிகளின் உரிமையாளர்கள் போரால் இடம்பெயர்ந்து வெளிநாடுகளில் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளனர். எனினும் இங்கு இருக்கும் காணி உரிமையாளர்களுக்கு மற்றைய காணிகளின் உரிமையாளர்களும் யார் என்பது தெரிந்திருக்கிறது. இதனடிப்படையில் ஆளும்தரப்பின் நடவடிக்கைக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்வது குறித்து ஆராய்வதற்காகவே இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

"மக்களின் கோரிக்கையின் பேரில் நானும் இன்னும் பல சட்டத்தரணிகளும் வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் வெற்றிலைக்கேணியில் காணி உரிமையாளர்களைச் சந்தித்துப் பேசவுள்ளோம். ஆளும் தரப்பு காணிகளை விடுவிப்பதாகத் தெரிவித்துவிட்டு 5.620 ஏக்கர் காணிகளைச் சுவீகரிக்க நடவடிக்கை எடுத்திருப்பது கண்டிக்கத்தக்கது. அதற்கெதிராக நாம் சட்ட ரீதியாகவும் போராடுவோம். ஏற்கனவே வலி. வடக்கில் காணிகளை விடுவிப்பதற்காக நாம் உயர் நீதிமன்றத்தில் பல வழக்குகளைத் தாக்கல் செய்து போராடியிருந்தோம். சாத்தியமான வழிகளை ஆராய்ந்து அந்தக் காணிகளை விடுவிக்கும்படி உயர் நீதிமன்றம் அந்த வழக்கில் படையினருக்கும் அரசுக்கும் உத்தரவிட்டிருந்தது. அதுபோன்றே இப்போதும் மக்களுக்காக இந்தக் காணி சுவீகரிப்புக்கு எதிராகவும் சட்டப் போராட்டம் ஒன்றை நடத்து குறித்து ஆராய்வதற்காகவே காணி உரிமையாளர்களைச் 2

## மனித வெள்ளத்தின் நடுவே ஆளும்தரப்பின் மே நாள்

### காலி முகத் திடலில் திரண்ட செஞ்சட்டைகள்

ஆளும் தேசிய மக்கள் சக்தியின் மே தினக் கூட்டம் நேற்று கொழும்பில் காலி முகத் திடலில் இடம்பெற்றது. லட்சக்கணக்கில் மக்கள் திரண்ட இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி, பிரதமர் உட்பட ஆளும்தரப்பின் முக்கிய உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். 2

## நல்லை ஆதீனத்தின் குருமுதல்வர் நேற்றிரவு இறையடி சேர்ந்தார்



நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் நேற்றிரவு 2

# 6,000 ஏக்கர் காணிகளை பறித்தெடுக்கும் திட்டத்தை கைவிடாவிட்டால் போராட்டம்

### ஜனாதிபதி யாழ்ப்பாணத்திற்குள் நுழைய விடமாட்டோம் என்று சுமந்திரன் சூளுரை

யாழ்ப்பாணம் முதல் முல்லைத்தீவு வரை சுமார் 6 ஆயிரம் ஏக்கர் காணிகளை அரசுடமையாக்குவதற்கான வர்த்தமானியை ஆளும்தரப்பு உடனடியாகத் திரும்பப் பெறவில்லை என்றால் ஜனாதிபதி அநுரகுமாரவுக்கு எதிராகப் போராட்டம் வெடிக்கும், அவரை யாழ்ப்பாணத்திற்குள் நுழைய அனுமதிக்க மாட்டோம் என்று தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் மருதங்கேணி முதல் முள்ளிவாய்க்கால் வரை யாழ்ப்பாணம் மாவட்டம், கிளிநொச்சி மாவட்டம், முல்லைத்தீவு மாவட்டம் ஆகியவற்றின் பெரும்பாலும் கடற்கரையோரப் பிரதேசங்களை அண்டி 5 ஆயிரத்து 940 ஏக்கர் காணிகளை அரச உடமையாக்கப்படுவதற்கான வர்த்தமானி அறிவித்தல் காணி ஆணையாளர் நாயகத்தால் அரச வர்த்தமானி மூலம் விடுக்கப்பட்டுள்ளது.

2025.03.28ஆம் திகதிய 5620 இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம இந்த அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 319 காணித் துண்டுகளை உள்ளடக்கி 3 ஆயிரத்து 669 ஏக்கரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 507 காணிகளை 2

## மாக்சிச லெனினிசக் கட்சியின் புரட்சிகர மே தின பேரணி நேற்று





புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சின் 'புரட்சிகர மே தின பேரணியும், பொதுக்கூட்டமும் இன்று பிற்பகல் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

மே தின பேரணி யாழ். ஐந்து சந்தியில் இருந்து தொடங்கி யாழ். நகரின் ஊடாகப் பயணித்து றிம்மர் மண்டபத்தை வந்தடைந்தது. அங்கு பொதுக்கூட்டம் இடம்பெற்றது.

பொருளாதார நெருக்கடிகளுக்கும், தேசிய இனங்களின் பிரச்சினைகளுக்கும் 2

## தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் உழைப்பாளர் தின கூட்டம் நல்லூரில்





தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் உழைப்பாளர் தினக் கூட்டம் நேற்றுப் பிற்பகல் யாழ்ப்பாணம், நல்லூர் பகுதியில் உள்ள இளங்கலைஞர் மண்டபத்தில் அமைப்பின் தலைவர் ஐங்கரநேசன் தலைமையில் இடம்பெற்றது.

கூட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார், ஜனநாயக தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி தவராசா, தமிழ் தேசிய கட்சியின் தலைவர் சட்டத்தரணி ஸ்ரீகாந்தா, அரசியல் செயற்பாட்டாளர் அருந்தவபாலன், பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டனர்.

## இடதுசாரிகள் எனக் கூறிக்கொண்டு மோசமான ஆட்சி செய்யும் அநுர

### தொழிலாளர் தின நிகழ்வில் சுமந்திரன் விளாசல்

கடன் மறுசீரமைப்புச் செய்கிறபோது தொழிலாளர் வர்க்கத்திற்குச் செய்யும் துரோகம் என்று சொன்னவர்கள் அதனையே இன்று பெருமையாகப் பேசிவருகிற நிலைமையைக் காணக்கூடியதாக உள்ளது. தங்களை இடதுசாரிகள் எனக் காட்டிகொண்டு மோசமான ஆட்சி செய்பவர்கள்தான் இந்த அநுரகுமார ஆட்சியாளர்கள் என்று தமிழ் அரசுக் கட்சியின் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மேதினக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தொழிலாளர்களிற்காக அன்று முதல் இன்றுவரை இந் நாட்டில் செயற்படுகின்ற ஒரே கட்சி தமிழ் அரசுக் கட்சிதான். தமிழ் மக்களின் நம்பிக்கைக்கு பாத்திரமான நம்பிக்கையை பெற்ற பிரதான கட்சியும் எமது கட்சிதான்.

இப்படியாக உழைக்கும் தொழிலாளர்களிற்காகவும் மக்களுக்காகவும் எப்போதும் உண்மையாகக் கட்சி குரல் கொடுத்து வருகிற நிலையில், ஆட்சியில் உள்ள அநுரகுமார தரப்பினர் தொடர்ச்சியாக பொய்யான வாக்குறுதிகளை வழங்கி ஏமாற்றி வருகின்றனர்.

இவ்வாறு கடந்த காலங்களில் 2

## தமிழ் தேசிய பேரவையின் மே எழுச்சி மாலு சந்தியில்



தமிழ் தேசிய பேரவையின் மே தின எழுச்சி கூட்டம் நேற்று மாலை 6:30 மணியளவில் நெல்லியடி மாலுசந்தியில் அமைந்துள்ள மைதானத்தில் இடம்பெற்றது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தன்னுடைய இரு பிள்ளைகளையும் மாவீரராக இனத்திற்கு வழங்கிய தாயார் பொது 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

அரசியல் நாகரிக உறவும் நேற்றோடு ஒரு முடிவுக்கு வந்திருப்பதாகப்படுகின்றது. ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சி சஜித் பிரேமதாசவை ஆதரித்தாலும் அநுரவைத் தாக்கவில்லை. ஜனநாயகக் கூட்டணி எல்லா சிங்களக் கட்சிகளையும் நிராகரித்து தான் முன்வைத்த வேட்பாளரான அரியநேத்திரனுக்கு வாக்களிக்குமாறு ஒரு நாடகம் நடத்தியதே தவிர, அநுரவைத் தாக்கவில்லை. முன்னணி தேர்தலைப் புறக்கணியுங்கள் என்று கேட்டதே தவிர அநுரவைத் தாக்கவில்லை. ஈபிடிபி ரணிலை ஆதரியுங்கள் என்றதே தவிர அநுரவைத் தாக்கவில்லை. நாடாளுமன்றத் தேர்தலில் இந்த நிலமை மாறி என்பிபி நேரடியாகத் தமிழ்க் கட்சிகளுடன் போட்டிக் களத்தில் குதித்தபோதும் அதனை இலக்கு வைத்து தமிழ்க் கட்சிகள் இயங்கவில்லை.

அதற்கு, தமிழ்த்தேசியத்தின்பேரில்தடியை நிறுத்தினாலும் மக்கள் வாக்களிப்பார்கள் என்ற அதீத நம்பிக்கை ஒரு காரணம், மக்கள் மத்தியில்ஜேவிபிக்குஒருஆதரவுஇருக்கின்றது என்பதுதெரிந்திருந்தாலும்அதுமாவட்டங்களில் வெற்றிபெறும் அளவிற்கு இருக்கும் என்று கணிக்காதது மற்றொரு காரணம். இதனால் என்பிபி அந்த இரு தேர்தல்களிலும் அரசியல் போர்க் களத்தில் தமிழ்க் கட்சிகளுடன் பொருதும் சூழல் வரவில்லை. இதனால் வன்னி மற்றும் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டங்களில்வெற்றிபெற்றஎன்பிபிமமதை கொண்டது. தமிழ் மக்கள் தம்பின்னால் என்று மனப்பால் குடிக்கத் தொடங்கியது. தமிழ்க் கட்சிகளைக் கிள்ளுக்கீரைகளாக நினைக்கத் தொடங்கியது. இனிமேல் தமிழ் மக்கள்தங்கள்பின்னால்தான்வாலையாட்டும் நாய்க்குட்டிகளாக இழுபடுவார்கள் என்று நினைத்தது. அந்த மமதையில் அது உள்ளாட்சி தேர்தலை அசால்ட்டாகக் கையாளத் தொடங்கியது. கர்வத்தில் ஆடியது. தமிழ்க் கட்சிகளைச் சீண்டியது. விளைவு அதுவே எதிர்பார்க்காத வகையில் தமிழ்க் கட்சிகள் தமது போர் வாள்களை என்பிபிக்கு எதிராக ஆக்கிரோஷமாகத் தூக்கிப் பிடிக்கத் தொடங்கியிருக்கின்றன.

அதன்ஆகக்கடைசியானஅறிவிப்புத்தான் காணி சுவீகரிப்புக்கு எதிராக ஜனாதிபதி அநுர யாழ்ப்பாணத்திற்குள் நுழைய முடியாத வகையில் போராட்டம் நடத்துவோம் என்கிற சுமந்திரனின் அறிவிப்பு.

தமிழ் மக்களுக்கும் நிலத்திற்குமான மானசிக உறவை, பிரிக்க முடியாத பிணைப்பை என்பிபி சரியாகக் கணிக்கத் தவறிவிட்டது. காணி நிலம் என்பது தமிழ் மக்களின் இருப்புக்கான கடைசி நம்பிக்கை என்பதைஅதுபுரிந்துகொள்ளாதுவிட்டுவிட்டது. அதன் விளைவாகவே படையினர் வசமுள்ள அனைத்துக் காணிகளையும் விடுவிப்போம் என்று கூறிக்கொண்டே வடக்கில் சுமார் 6 ஆயிரம் ஏக்கர் காணிகளைச் சுவிகரிப்பதற்கு எடுத்திருக்கக்கூடியநடவடிக்கை. ஆளும்தரப்பு இப்போது சுவீகரிப்பதாக அறிவித்திருக்கும் காணிகளில் பலவற்றின் உரிமையாளர்கள் வெளிநாடுகளில் வசிக்கிறார்கள். போராலும் படையினராலும் இடம்பெயர்க்கப்பட்ட இவர்கள் உயிர் பிழைப்பதற்காக வெளிநாடுகளில் தஞ்சமடைவது தவிர்க்க முடியாததாக இருந்த நிலையில், மூன்று மாத காலத்திற்குள் அவர்களுக்குச் செய்தி போய் அவர்கள் வந்து இந்த நிலங்களிற்கு உரிமை கோரப்போவதில்லை, அதனால் அறிவிக்கப்பட்டுள்ள 6 ஆயிரம் ஏக்கரில் சரி அரைவாசிக்கும் மேலானவற்றைச் சவீகரித்துவிடலாம் என்று கள்ளக் கணக்குப் பண்ணியே என்பிபி இந்தக் கைங்கரியத்தில் இறங்கியுள்ளது.

சிங்களஆளும்அதிகாரவர்க்கம்எப்போதும் தமிழ்நிலத்தைஅபகரிக்கும்சிந்தனையுடனும் வேட்கையுடனுமே இருக்கின்றது. அது அதற்கானவாய்ப்புக்களைத்தேடிக்கொண்டே இருக்கின்றது. அதனுடைய குறிக்கோளில் இருந்து அது விலகுவதில்லை. என்பிபி தெரிந்தும் தெரியாமலும் அறிந்திருந்தும் பொருத்தமற்ற நேரத்தில் இந்த அதிகார வர்க்கத்தின் படுகுழியில் விழுந்திருக்கின்றது. அது நிச்சயம் சர்வநாசத்தை ஏற்படுத்தும். நிலத்திற்கான தமிழர்களின் போராட்டம் லேசுப்பட்டதில்லை. அதுஇலங்கைஎன்கிறநாடு சுதந்திரமடைந்துசிறீலங்காவாகமாறியபின்னர் தீவிரமடைந்து பற்றியெறிந்த பிரச்சினை. இப்போது மீண்டும் தீப்பிடித்திருக்கிறது. இந்தத் தீ என்பிபியை வடக்கு கிழக்கிலிருந்து எரித்துச் சாம்பராக்கும் என்பது நிச்சயம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## 6,000 ஏக்கர்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளடக்கி ஆயிரத்து 702 ஏக்கரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 58 காணிகளை உள்ளடக்கி 515 ஏக்கரும் என மொத்தம் 5 ஆயிரத்து 940 ஏக்கர் நிலம் அரச உடமையாக்கப்படுவதற்கானநடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அரச உடமையாக்கப்படவுள்ள இந்தக் காணிகளில் தனியார் பலரது வீடுகள், பொது இடங்கள், ஆலயங்கள்மட்டுமன்றிபலதொழில் முயற்சி மையங்களும் காணப்படுகின்றன எனக் கூறப்படுகின்றது.

யாழ். குடாநாட்டின் மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவு, கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளிமற்றும்கண்டாவளைபிரதேச செயலாளர் பிரிவுகளின் கடற்கரையோரங்கள் வழியாக முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளிவாய்க்கால் வரை இந்தப் பிரதேசங்கள் நீள்கின்றன.

இந்தப் பிரதேசங்களில் உள்ள நிலங்களில் அரச நிலம் எது, தனியார் நிலம் எது எனப் பிரதேசசெயலகங்களுக்கோ அல்லது மாவட்ட செயலகங்களுக்கோ அடையாளம் தெரியாத காரணத்தாலேயே இவ்வாறான அறிவித்தல் வெளியிடப்படுவதாகவும் – மூன்று மாத காலப் பகுதிக்குள் தமது காணி என்று தனியார் ஆவணங்களைச் சம்ப்பிக்கும் பட்சத்தில் அது தொடர்பில் விசாரணை நடத்தி அந்த நிலங்களை விடுவித்து ஏனைய நிலங்கள் அரச நிலம் என 3 மாத நிறைவில் மீண்டும் ஒரு வர்த்தமானி அறிவித்தல் பிரசுரிக்கப்படும் எனவும் அந்தப் பகுதிகளின் பகுதி பிரதேச செயலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பிரதேசங்களில் 500 ஏக்கருக்கும் அதிகமான நிலங்களை அரச காணிகளாகச் சுவீகரித்து பிற நாடு ஒன்றுக்கு வழங்க முயற்சி இடம்பெறுகின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர்சிவஞானம்சிறீதரன்கடந்தஆண்டு நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டியபோது அவ்வாறு எந்த முயற்சியும் இல்லை என ஆளும்தரப்பினரும் அதிகாரிகளும் மறுத்திருந்தனர்.

இந்த நிலையிலேயே இந்தக் காணிச் சுவீகரிப்பு அறிவிப்பு உடனடியாகத் திரும்பப் பெறப்படவேண்டும் என்று தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் வலியுறுத்தியுள்ளார். இல்லையேல் ஜனாதிபதி யாழ்ப்பாண மண்ணில் கால் வைக்க அனுமதிக்க மாட்டோம் என்று அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நீங்கள்வழங்கியவாக்குறுதிகளில்ஒன்றாக மக்களின்காணிகள்மக்களிடமேவழங்கப்படும் என்று கூறியிருந்தீர்கள். படையினர் வசமுள்ள மக்கள் காணியை விரைவில் விடுவிப்போம் என்றும் கூறியிருந்தீர்கள். ஆனால் ஆட்சிக்கு வந்த பின்னர் அதற்கு மாறாகக் காணிகளைச் சுவீகரிக்கும் நடவடிக்கையில் தற்போது இறங்கியுள்ளீர்கள். உங்களுடைய இந்தச் செயற்பாடுகள் ஏற்றுக் கொள்ளப்படமுடியாதவை.

உங்களது வாக்குறுதிக்கு மாறாக காணிகளை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதனை உடனடியாக நிறுத்திக் கொள்ளுங்கள். குறிப்பாக காணி சுவீகரிக்கும் வர்த்தமாணியை உடனடியாக ஆளும்தரப்புக் கைவாங்கவேண்டும். இல்லாவிட்டால் நீங்கள் யாழ். மண்ணிற்கு வரமுடியாமல்அல்லதுகால்வைக்கமுடியாமல் செய்வோம்.

எங்களை ஏமாளிகள் என கருத வேண்டாம். ஏமாற்றுவதை நாங்கள் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை. அதற்கு எதிரான நடவடிக்கைகளை நாங்கள் நிச்சயம் எடுப்போம்.

மேலும் இன்றைய மே நாளில் நாம் சில தீர்மானங்களையும் எடுத்துள்ளோம். குறிப்பாக இராணுவக் கையிருப்பில் உள்ள எமது மக்களின் காணிகள் முழுமையாக விடுவிக்கப்படவேண்டும், விலைவாசி உயர்வைக்குறைக்கவேண்டும், தொழிலாளர் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் உள்ளிட்ட தீர்மானங்களை எடுத்துள்ளோம் – என்றார்.

## இடதுசாரிகள்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களை ஏமாற்றியவர்களுக்கு என்ன நடந்தது என்பது அனைவருக்கும் தெரியும். குறிப்பாக கோட்டாபாய ராஜபக்ச 51 வீத்த்திற்கு மேல் வாக்கெடுத்து ஜனாதிபதியாகியபோதும் அதே மக்களால் துரத்தியடிக்கப்பட்டதைப் பார்த்திருந்தோம்.

சிங்கள மக்களாலேதான் நான் ஜனாதிபதியாக வந்தேன் எனக் கூறிக் கொண்டிருந்த கோத்தாவிற்கே இந்தக் கதி என்றால் கேவலம் வெறுமனே 42 சத வீத வாக்குகளால் ஜனாதிபதியாக வந்த இவர்களுக்கு என்ன நடக்குமோ?ஆகவே பொய்யான வாக்குறுதி வழங்கி மக்களை ஏமாற்றுவதை நிறுத்திக் கொள்ளுங்கள்.

இன்றைக்குநாட்டில்நாளாந்தம்விலைவாசி அதிகரித்துக் கொண்டே செல்கிறது. அதிலும் தேர்தல் வருகிறபோது குறைப்பது மாதிரி குறைத்துக் கொண்டாலும் மறுபக்கம் விலை வாசி அதிகரித்துக் கொண்டே செல்கிறது. சீனியைவிட உப்பின் விலை அதிகரித்துள்ளது. அதிலும் ரஜலுனு என உப்பிற்கு ஒரு புதிய பெயரை வைத்தவர்கள் அதைப் பற்றிக் கேட்டால் பெயரைப் பார்க்காதீர்கள் ருசியைப் பாருங்கள் எனச் சொல்கிறார்கள்.

தமிழ்பெயரைசிங்களப்பெயராகஅவர்கள் மாற்றுவார்களாம் அதைப் பற்றி கேட்டால் சம்பந்தமில்லாமல் பேசுவார்களாம். ஆக தமிழ் பெயரை அவர்கள் இங்கு மாற்றலாம். தாங்கள்தமிழ்பெயரைவைக்கத்தயாரில்லை.

இவ்வாறானவர்கள்தான் எங்களுக்கு வந்து உபதேசம் செய்கிறார்கள். இவர்கள் ஆட்சிக்கு வந்து ஆறு மாதத்திலே இதெல்லாம் நடக்கிறதென்றால் இனி என்ன எல்லாம் நடக்க போகிறதோ என்பதை ஊகிப்பது கடினமல்ல.

சர்வதேசநாணயநிதியஒப்பந்தம்தங்களது அடிப்படைக்கொள்கைக்குமாறானதுஎனக்கூறி அதற்குஎதிராகநீதிமன்றம்வரைசென்றவர்கள் இன்றைக்கு அந்த ஒப்பந்தத்தில் எதனையும் மாற்றாது அப்படியே ஏற்றுக்கொண்டு செயற்படுகின்றனர்.

கடன் மறுசீரமைப்புச் செய்கிறபோது தொழிலாளர்வர்க்கத்திற்குச்செய்யும்துரோகம் என்று சொன்னவர்கள் அதனையே இன்று பெருமையாகப் பேசிவருகிற நிலைமையைக் காணக்கூடியதாக உள்ளது.

தங்களைஇடதுசாரிகள்எனக்காட்டிகொண்டு மோசமான ஆட்சி செய்பவர்கள்தான் இந்த அநுரகுமார ஆட்சியாளர்கள். உங்களது தலைவர் ரோகன விஜயவீர தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு என்று கூறியிருக்கின்றார் என்றால் நீங்களும் உண்மையான இடதுசாரிகள் என்றால் தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு எனச் சொல்லுங்கள். இல்லாவிட்டால் சிவப்பு சட்டை அணிவதில் அர்த்தமில்லை

தொழிலாளர்களுக்குநன்மைஅளிப்பதாக கூறிக் கண்டு முதலாளித்துவ கொள்கையில் பயணித்துக் கொண்டு தொழிலாளர்களுக்கு எப்படி நன்மையளிக்க முடியும். எனவே முதலாளித்துவ கொள்கையை விட்டு விலகி உங்களது பழைய ஆரம்பத்திற்கு வாருங்கள்.

லெலினிசக் கோட்பாட்டிற்கு வாருங்கள், சம்பள உயர்வு கொடுங்கள், அப்படியாக உங்களால் திரும்பி வர முடியாவிட்டால் மக்களிடம்செல்லமுடியாதநிலைஉங்களுக்கு விரைவில்ஏற்படும்என்பதையும்தெரிவித்துக் கொள்கிறோம்.

தொழிலாளர்வர்க்கத்திற்கும்ஒடுக்கப்படுகிற மக்களுக்கும் குரல் கொடுக்கும் ஒரே கட்சி தமிழ் அரசுக் கட்சிதான் – என்றார்.

## மாக்சிச....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்வுகளை வலியுறுத்தி குறித்த மே தின பேரணியும், பொதுக்கூட்டமும் இடம்பெற்றன.

நிகழ்வில் புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சின் பொது செயலாளர் செந்திவேல், கட்சியின்வடபிராந்தியசெயலாளர் செல்வம், கட்சி உறுப்பினர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டிருந்தனர்.

## நல்லை.....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இறையடி சேர்ந்தார்.

நோய்வாய்ப்பட்டு கொழும்பில் சிகிச்சை பெற்றுவந்த அவர், சிகிச்சை பயனின்றி நேற்று மறைந்தார்.

இந்தியதிருவாவடுதுறையிலுள்ளதருமபுரம் ஆதீனத்தின் அங்கீகாரத்துடன், யாழ்ப்பாணம் நல்லூரில் உள்ள திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் குருமுதல்வராகத் 1990களில் ஞானசம்பந்த பரமாச்சாரியார் பதவியேற்றார்.

இவர் மணி ஐயர் என்று புகழ்பெற்ற ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் சீடராக இருந்தவர். அவருக்குப் பின்னர் ஆதீனப் பணிகளை அக்கறையுடன்கவனித்துக்கொண்டவர். தமிழ், சைவம் இரண்டினதும் அடையாளமாகத் திகழ்ந்தவர்.

நல்லூர்பகுதியில்உள்ளசிவன்கோயில்கள், கல்வி நிலையங்கள், வித்தியாசமான ஆன்மீக விழாக்கள் போன்றவற்றை ஆதரவுடன் வழிநடத்தி வருகிறார்.

ஆண்டுதோறும் சைவ புலவர் விழா, அருட்பெருஞ்ஜோதி திருநாள், தேவார வினா-விடைப் போட்டிகள் ஆகியவற்றை நடத்தியுள்ளார்.

தீவிர உள்நாட்டுப் போரின்போதும், தொடர்ந்து மடத்தினை நிலைநிறுத்தியவர். யாழ்ப்பாணத்திற்கு வரும் தெற்கின் அரசியல் தலைவர்களும் வெளிநாட்டுத் தூதுவர்களும்இவரைச்சந்தித்துப்பேசுவதற்குத் தவறியதில்லை. அவர்களிடம்தமிழ்த்தேசியம் சார்ந்த கருத்துக்களை வலியுறுத்தி வந்தவர்.

மதநெறி, மொழிமற்றும்சைவமரபுகுறித்த விழிப்புணர்வை இளைய தலைமுறைக்கு வழங்கி வந்திருக்கிறார்.

சமீப காலங்களில், சைவத் தொண்டு வளர்ச்சி திட்டங்கள், புத்தக வெளியீடுகள், மற்றும் ஓம்கார அன்னை நிவாசம் போன்ற சமூக நலவிழா நிகழ்வுகளையும் முன்னெடுத்துள்ளார்.

## மனித....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'மேதினப்பேரணி: நாட்டைக்கட்டியெழுப்ப மக்கள் சக்தி' என்ற கருப்பொருளின் கீழ் இந்தப் பேரணியை ஆளும்தரப்பு ஒழுங்கு செய்திருந்தது. இந்த மே தினப் பேரணியில் சீனா, இந்தியாமற்றும்வியட்நாம்கம்யூனிஸ்ட் கட்சிகளின் பிரதிநிதிகளும் பங்கேற்று மேடையை அலங்கரித்திருந்தனர்.

கூட்டத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க முதன்மை உரையை ஆற்றியிருந்தார்.

கூட்டத்தில் உரையாற்றிய தொழிலாளர் நலத்துறைப் பிரதி அமைச்சர் மஹிந்த ஜெயசிங்க, தனியார் துறை ஊதிய உயர்வுக்கான நாடாளுமன்றத் தீர்மான வரைவு அடுத்த அமைச்சரவையில் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவித்தார்.

ஆளும்தரப்பின் இந்த மேதினக்கூட்டத்தில் இலங்கைமுழுவதும்இருந்துலட்சக்கணக்கில் மக்கள் திரண்டிருந்தனர். காலி –முகத் திடல் முழுவதும் –மனிதத் தலைகளால் நிறைந்து காணப்பட்டது.

## தமிழ் தேசிய...

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுடரேற்றி நிகழ்வைத் தொடங்கி வைத்தார். தொடர்ந்து மங்கல விளக்கேற்றி மே தின எழுச்சி கூட்டம் தொடங்கியது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார், செயலாளர் கஜேந்திரன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சரவணபவன், தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் ஐங்கரநேசன், அரசியல் செயற்பாட்டாளர் அருந்தவபாலன், தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் சிவாஜிலிங்கம், கரவெட்டி பிரதேசத்தின் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயற்பாட்டாளர்கள், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின்நலன்விரும்பிகள்பொதுமக்கள் எனப் பலரும் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

## காணி சுவீகரிப்பை ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திக்கின்றோம்'' என்று சுமந்திரன் காலைக்கதிர் இணையப் பத்திரிகையிடம் தெரிவித்தார்.

அறிவித்தல் கிடைத்தவர்கள் தவிர, யாழ்ப்பாணம் முதல் முல்லைத்தீவு வரை பராமரிப்பின்றி காணிகளை வைத்திருக்கும் உரிமையாளர்கள் அனைவரும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு தமது கோரிக்கைகளை முன்வைப்பதுடன் சட்ட ஆலோசனைகளையும் பெறலாம் என்று கூட்ட ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

காலைக்கதிர்
Kalaikkathir

# பிள்ளையான் தற்போது சிறையில் இருப்பது கொடுமையான விடயம்

## கருணா ஆதங்கம்

பிள்ளையான் தற்போது சிறையில் இருப்பது கொடுமையான விடயமாகும். ஏற்கனவே இல்லாத பிரச்சினையில் நான்கு வருடங்கள் சிறையிலேயே இருந்தவர். அவர் அப்போது நிரபராதி என வெளியே வந்தவர். அவ்வளவு காலத்திற்கும் யார் பதில் சொல்வது. அது போன்றுதான் தற்போதும் அவருக்கு நடைபெற்று இருக்கின்றது. அதற்காக வேண்டி வெளிநாட்டில் இருக்கின்ற ஊதுகுழல்கள் கத்திக்கொண்டு இருப்பார்கள்.

என முன்னாள் பிரதியமைச்சரும், தமிர் ஐக்கிய சுதந்திர முன்ணணியின் தலைவருமான விநாயகமூர்த்தி முரளிதரன்(கருணா அம்மான்) தெரிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் கிழக்கு தமிழர் கூட்டமைப்பு சார்பில் மட்டக்களப்பு மாவட்டம் பங்குடாவெளி 14 ஆம் வட்டாரத்திற்கான தேர்தல் பரப்புரை காரியாலயம், வட்டார வேட்பாளர் சின்னத்தம்பி ரவிச்சந்திரன் தலைமையில் செவ்வாய்கிழமை பதுளை வீதி இலுப்படிச்சேனையில் திறந்து வைக்கப்பட்டிருந்தது. இதன்போது கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் சிரேஷ்ட பிரதி தலைவர் நாகலிங்கம் திரவியம், முற்போக்கு தமிழர் கழகத்தின் செயலாளர் ஜோகநாதன் றொஸ்மன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.



இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் -

கிழக்கு மாகாணத்திலே முதன் முதலாக மாகாண சபையைக் கட்டி எழுப்பி அதிலே முதல் முதலமைச்சராக பிள்ளையான் பதவி வகித்து அதனூடாக பாரிய அபிவிருத்திகளை செய்திருந்தார். அதன் பின்னர்தான் கல்வி அபிவிருத்தி உள்ளிட்ட அனைத்து அபிவிருத்திகளும் கிழக்கில் இடம்பெற்றன.

பின்னர் நான் மத்திய அரசாங்கத்தில் இருந்து கொண்டு பல வீட்டுத்திட்டங்களையும், வீதிகள், பாலங்கள், என பல அவிருத்திட்டங்களை செய்திருந்தேன். அதுபோல் வியாழேந்திரன் அவர்கள் மத்திய அரசாங்கத்தில் இருந்தபோது பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை செய்திருந்தார். இவ்வாறு பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை செய்து விட்டுதான் நாங்கள் தற்போது இந்த உள்ளூராட்சி மன்றத்தில் நமது பிரதிநிதிகளை களம் இறக்கி இருக்கின்றோம். எனவே மக்கள் தற்போது கிடைத்திருக்கின்ற வாய்ப்பை தவற விடக்கூடாது. ஏனெனில் பல பிரச்சினைகள் நம் மத்தியில் காணப்படுகின்றன.

ஒரு நபர் வயல் செய்வதற்காக பல மக்கள் பாவிக்கின்ற குளத்தை உடைக்கின்றார்கள். மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றார்கள் ஒருவரும் சென்று அதனை பார்வையிடவில்லை. இவ்வாறானவர்கள் நமக்கு எதற்கு. தேர்தல் காலத்தில் மேச்சல்தரைப் பிரச்சினையைத் தீர்த்து வைப்போம் என தெரிவிப்பார்கள் தேர்தலில் வெற்றி பெற்றதும் அந்தப் பக்கமே அவர்கள் போகவில்லை. இவர்களை நம்பி வாக்களித்ததுதான் மீதமாக உள்ளது. இதற்காக வேண்டித்தான் நாம் கிழக்கு தமிழர் கூட்டமைப்பு என்ற ஓர் அமைப்பை உருவாக்கியுள்ளோம். இதனை எமது மக்கள் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் அதற்கான ஓர் அத்திவாரம் தற்போது போடப்பட்டுள்ளது.

மக்கள் இவ்விடயத்தில் விழிப்பாக இருந்து செயற்பட வேண்டும். தவறான பிரசாரங்களை எடுத்து விடுவார்கள் இதனை நம்பி மக்கள் ஏமாந்து விடக்கூடாது. தற்போது கிடைத்திருக்கிறது ஒரு நல்லதொரு வாய்ப்பாகும். இந்த வாய்ப்பை சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டும். இதனை ஏனையோருக்கும் தெளிவாக்க வேண்டும்.

இலங்கை அரசாங்கத்தில் ஒரு விதி போன்று ஒன்று உள்ளது அரசாங்கம் மாறி மாறி வருகின்ற போது முன்னை அரசாங்கத்தில் இருப்பவர்களை பிடித்து கைது செய்வது விதி போன்று உள்ளது. இப்போது இருக்கின்ற அரசாங்கத்தில் இருப்பவர்கள் அடுத்த முறைவருகின்ற அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டு அனைவரும் உள்ளே அனுப்பப்படுவார்கள். நானும் உள்ளே இருந்து வந்தவன்தான் இவை அனைத்தும் அரசியல் பழி வாங்கல்கள். இவை எமது மக்களையும் எமது இருப்புக்களையும் ஒருபோதும் பாதிக்கப் போவதில்லை. இதை பற்றி நாம் அலட்டிக் கொள்ள வேண்டிய தேவையும் இல்லை. ஆனால் எவ்வகையான தியாகங்களை செய்தவர்கள் என்பதை எனது மக்கள் சிந்திக்க வேண்டும்.

பிள்ளையான் தற்போது சிறையில் இருப்பது கொடுமையான விடயமாகும். ஏற்கனவே இல்லாத பிரச்சினையில் நான்கு வருடங்கள் சிறையிலேயே இருந்தவர். அவர் அப்போது நிரபராதி என வெளியே வந்தவர். அவ்வளவு காலத்திற்கும் யார் பதில் சொல்வது. அது போன்றுதான் தற்போதும் அவருக்கு நடைபெற்று இருக்கின்றது. அதற்காக வேண்டி வெளிநாட்டில் இருக்கின்ற ஊதுகுழல்கள் கத்திக்கொண்டு இருப்பார்கள்.

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு பெரும்பான்மையான மக்கள் வாக்களித்து எமது உறுப்பினர்களை வெற்றிபெறச்செய்ய வேண்டும் அது கிழக்கு மாகாணத்திற்குரிய ஓர் அத்திபாரமாகும். தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி என்பது கிழக்கு மாகாண மக்களுக்காக முதன்முதலாக உருவாக்கப்பட்ட ஒரு கட்சியாகும். அக்கட்சியின் சின்னம்தான் படகு சின்னமாகும். அதன் ஊடாக கிழக்கு மாகாணத்தை காப்பாற்ற வேண்டும் என்பதுதான் நமது நோக்கம்.

அம்பாறை மாவட்டத்திலேயே 60 கிராமங்கள் இல்லாமல் போய்விட்டன. மட்டக்களப்பில் தளவாய்க் கிராமமும் இல்லாமல் போய்விட்டது. அதற்கு எல்லாம் துணிந்தவன் முன்வர வேண்டும். நாங்கள் துணிந்துதான் நிற்கின்றோம். தமிழ் தேசிய கூட்டமைப்பு என்ற ஒன்று இல்லை. அவர்களுக்கு தலைவரும் இல்லை. யாரும் இல்லை தலைமை போட்டிக்கு வழக்கு வைத்து ஆளுக்கு ஆள் சண்டை பிடிக்கிறார்கள்.

வடக்கு மக்கள் அவர்களை விரட்டியுள்ளார்கள் அவர்களை, கிழக்கிலும், விரட்டி அடிக்க வேண்டும் அரசாங்க திட்டம் பின் கதவால் சென்று முன் கதவால் அரசாங்கத்தை அவதூறாக பேசுவதாக நடிக்கிறார்கள். அவ்வாறானவர்கள்தான் அவர்கள் அவர்கள் அரசாங்கத்தின் முகவர்களாக இருந்து செயற்பட்டவர்கள். இதனை வடக்கு மக்கள் நன்கு அறிந்துவிட்டார்கள். கிழக்கு மாகாண மக்களும் இதனை உணர்ந்து செயல்பட வேண்டும். என்பதை நான் கூறிக் கொள்கின்றேன். இவைகள் அனைத்தையும் வீசி எறிந்து விட்டு கிராமத்து மக்கள் எமது போராளிகள் எமது வேட்பாளர்களை வெற்றிபெற வைக்க வேண்டும் என அவர் இதன்போது தெரிவித்தார்.

# கருத்தரங்கு

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் வருமான வரி தொடர்பான கருத்தரங்கு அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெற்றது.

வருமான வரி பற்றிய அறிமுகமாகவும், வரி செலுத்துநர் அடையாள இலக்கம் (ரின் இலக்கம்) பெற்றுக்கொள்வதற்கான வழிமுறை தொடர்பான விழிப்புணர்வை வழங்குவதாகவும் இக்கருத்தரங்கு இடம்பெற்றது.

இதன் வளவாளர்களாக யாழ்ப்பாணத்தில் உள்ள வரி செலுத்துதல் தொடர்பான தனியார் ஆலோசனை நிறுவனத்தின் இயக்குநர்களான பட்டயக் கணக்காளர் கே.கேந்திரன், கணக்காளர் சி.சிவதர்சன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆங்கிலநெறி ஆசிரிய மாணவி கௌசிகா நிரோஜன் நிகழ்வை நெறிப்படுத்தினார். பிரதி அதிபர் க.செந்தில்குமரன் அதிதிகளை வரவேற்று அறிமுக உரையை ஆற்றினார்.

அரசின் வரிக்கொள்கை தொடர்பாகவும் தனிநபர் ஒருவர் செலுத்த வேண்டிய வருமான வரி தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டதுடன்.

ரின் இலக்கம் ஒன்றைப் பெறுவது தொடர்பான செயல்முறை அறிவும் வளவாளர்களால் வழங்கி வைக்கப்பட்டது

இதேவேளை வளவாளர்கள் இருவரும் கலாசாலை சமூகத்தினரால் கௌரவிக்கப்பட்டனர்.





காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கண்துடைப்பு நடவடிக்கைகள் வேண்டாம்

வடக்கு மாகாண மக்களுக்கு மீளக்குடியமர்வு என்பது வெறும் வாழ்க்கை அமைப்புத் தேவையல்ல, அது ஒரு அடிப்படை மனித உரிமை. தங்களது பூர்வீக நிலங்கள் மீண்டும் தம்மிடம் வழங்கப்படவேண்டும் என்ற மக்கள் கோரிக்கையை அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த ஆளும் தரப்புக்கள் கடந்த பல ஆண்டுகளாக நிராகரித்தே வந்துள்ளன. இந்நிலையில் மே நாளான நேற்று யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள 40.7 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்படுவதாக பாதுகாப்பு அமைச்சு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

முதல் பார்வையில் இது ஒரு நல்ல முன்னேற்றமாகத் தோன்றலாம். ஆனால், விடுவிக்கப்படவிருக்கும் காணிகளில் கண்ணிவெடிகள் அகற்றப்பட வேண்டியுள்ளது எனவும் அதற்கான நடவடிக்கைகள் தொடரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது மிக முக்கியமான ஒரு புள்ளியாகும். கண்ணிவெடிகள் அகற்றப்படாத நிலங்கள், மக்கள் வாழும் நிலங்களாக மாற முடியாது. மக்கள் அங்கு வீடு கட்ட முடியாது. விவசாயம் செய்வதற்கும் பயபடுத்தும் சூழல் நிலவும். இந்த நிலையை உணராமல், ”இனிமேல் உங்கள் நிலங்கள் உங்களிடம்” என அதிகாரப்பூர்வ அறிவிப்பு செய்வது என்பது ஒரு கண்துடைப்புக் காட்சியாகவே அமைகிறது.

அதுமட்டுமல்லாமல், இச்செய்தி வெளியாகும் நேரம் கவனிக்கத்தக்கது. தென்னிலங்கை மக்களுக்கும், உலக சமூகத்துக்கும் முன்வைக்கப்படும் இத்தகைய அறிவிப்புகள் பெரும்பாலும் தேர்தல் காலங்களில் நடைபெறுவது வழக்கம். வடகிழக்கு மக்களின் உணர்வுகளைத் தேவைப்படும் நேரத்தில் ‘சமரச’ முயற்சியாக அரசியல் வியாபாரத்திற்கு பயன்படுத்தும் போக்கே இது. இம்முறை உள்ளூராட்சித் தேர்தல் நெருங்கும் நிலையில், இத்தகைய செயற்திட்ட அறிவிப்புகள் மக்களை ஏமாற்றும் வித்தைகளாகவே காணப்படுகின்றன.

நிலங்கள் விடுவிக்கப்படும் என்பதை ஆளும்தரப்பு திரும்பத் திரும்பக் கூறும் நேரத்தில், மக்கள் தரப்பில் எழும் முதல் கேள்வி: ”எப்போது அந்த நிலங்களில் நாங்கள் மீண்டும் குடியேறுவோம்?” என்பதாகும். அந்தக் கேள்விக்கு பதிலில்லை என்றால், விடுவிக்கப்பட்ட நிலம் எதற்காக? அது அரசியல் விளம்பரத்திற்காக மட்டுமே, மக்கள் வாழ்வில் எந்த மாற்றத்தையும் கொண்டு வராத அறிவிப்பு இது.

மக்களின் ஆணை பெற்ற ஆளும்தரப்பும், இராணுவமும் உணரவேண்டிய முக்கியமான உண்மை ஒன்று இருக்கிறது, மக்கள் மீள்குடியேறி வாழும் உரிமையை ஒத்திவைப்பது, ஜனநாயக அடிப்படைகளுக்கு எதிரானது. இனி நிலங்களை விடுவிக்கவேண்டும் எனில், முழுமையான கண்ணிவெடி அகற்றம் செய்யப்பட்ட பிறகே செயல்படுத்தப்பட வேண்டும். அதற்கு முறையான காலக்கெடு, செயல்திட்டம் மற்றும் கண்காணிப்பு அமைப்புகளும் வேண்டியதே.

தற்காலிக அரசியல் நலன்களைப் பெற மக்கள் உணர்வுகளை பயன்படுத்தும் கண்துடைப்பு நடவடிக்கைகள் கூடாது. உண்மையான சமாதானம் நிலவ வேண்டுமானால், நிலங்கள் மக்களுக்கு திருப்பித் தரப்பட வேண்டியது காலம் தாழ்த்தாமல், முழுமையான வடிவிலேயே இருக்கவேண்டும்.

# மதங்களின் பெயரால்

**என். சத்தியமூர்த்தி**

ஒரு மதத்தையோ, மத நம்பிக்கையையோ கொச்சைப்படுத்துவதாக யாரும் கருதிவிடக் கூடாது. ஆனால், தேசிய அளவில் உள்ளாட்சி தேர்தல்கள் நடக்கவிருக்கும் தருணத்தில், நாட்டை ஆளும் ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கவின் அரசு, சாதாரண மக்களின் மத நம்பிக்கை மற்றும் உணர்வையும் தூண்டிவிட்டு, அதில் குளிர்காய நினைக்கிறதோ என்றே எண்ணத் தோன்றுகிறது.

பிற அரசியல் கட்சிகளையும் தலைமைகளையும் இது போன்ற விடயங்களில் தொடர்ந்து தாக்கிவிட்டு, இப்போது ஆளும் ஜேவிபி தலைமை அதே வழியையே பின்பற்றுகிறது. இது, இந்திரன் மாறினாலும் இந்திராணி மாறவில்லை என்ற பகடி பழஞ்சொல்லையே நினைவுபடுத்துகிறது.

நம்பிக்கை மற்றும் அடிப்படைப் பழக்கவழக்கங்களைப் பொறுத்தவரையில், ஒரு மதத்திற்கும் மற்றொன்றிற்கும் இடையே பெரிய இடைவெளி இல்லை எனலாம். அந்த விதத்தில், இஸ்லாம் தவிர்த்து, பௌத்தம், கிறிஸ்துவம் மற்றும் இந்து மதங்களை, அந்த மக்களின் மத உணர்வுகளுக்கு தீனி போடும் விதமாகவே, ஆளும் ஜேவிபி- - என்பிபி கூட்டணி தற்போதைய தேர்தல் காலத்தில் செயல்படுகிறது.

குறிப்பாக, நாட்டின் பெரும்பான்மை இனத்தவரான பௌத்த மதத்தினரையும் அவர்களது நம்பிக்கையையும் குறிவைத்து, நூற்றாண்டுகளாக பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கும் கௌதம புத்தரின் திருபல் தந்த தாது தரிசனத்திற்கு அரசு வழி செய்துள்ளது. கண்டியில் தலதா மாளிகையில் தரிசனத்திற்காக வைக்கப்பட்டிருந்த அந்த நினைவு தெய்வீகச் சின்னத்தை இலட்ச கணக்கான மக்கள் கண்டு, தரிசித்துச் சென்றுள்ளார்கள். ஆனால் அந்த தரிசனம் குறித்து, இங்கே, தமிழ் பத்திரிகைகளில் ஒரு வரி செய்திகூட இல்லை என்பதுதான், இந்த நாட்டின் சாபக்கேடு.

அது போலவே, இந்து மக்களின் கோவில்களை, மற்ற நாடுகளில் உள்ளது போல் ’டெம்பிள்’ என்று ஆங்கிலத்தில் அழைக்காமல் இருப்பதும் இந்த நாட்டில் மட்டும்தான் நிகழும். மாறாக, இந்து மக்களின் வழிபாட்டு தலங்களை ’கோவில்’ என்றே, ஆங்கிலத்திலும் அழைத்து, அவ்வாறே அரசிதழ் உள்ளிட்ட அனைத்து ஆவணங்களிலும் குறிப்பதும் ஆச்சரியமான விடயம்.

சிங்களவர்களைப் பொறுத்த வரையிலும், அவர்கள் பெரும்பான்மையில் இருக்கும் ஆளும்தரப்பைப் பொறுத்த வரையிலும், ’டெம்பிள்’ என்ற பதம், ஆங்கிலத்தில், பௌத்த வழிபாட்டு தலங்களை மட்டுமே குறிக்கும். அவ்வாறு மட்டுமே குறிப்பிடவேண்டும்.

தலதா மாளிகை தரிசனத்திற்கும் ஆளும் தரப்பின் உள்ளாட்சி தேர்தல் பரப்புரைக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்று யாராவது கூறினால், அவர்கள் தங்களது மூளையை சோதனை செய்து கொள்ளவேண்டும். அல்லது அவர்கள் ஏற்கனவே மூளை சலவை செய்யப்பட்டவர்கள் என்றே கருதப்படவேண்டும்.

### ஒரே கல்லில்...

ஆளும்தரப்பு அத்துடன் நின்றுவிடவில்லை. தேசிய அளவில் சுமார் ஐந்து அல்லது ஆறு சதவீத வாக்குகளே உள்ள கத்தோலிக்க கிறிஸ்தவ மதத்தினரை குறிவைத்து, ஈஸ்டர் ஞாயிறு தீவிரவாத தாக்குதல் விசாரணையை முடுக்கி விடுவதாக அறிவித்து அந்த பாதையில் பயணிக்கவும் செய்கிறது. முதலில் பிள்ளையான் கைது, பின்னர், அவர், இவர், எவர் கைது



செய்யப்பட போகிறார்கள் என்று பல்வேறு தலைவர்களின் பெயர்களை சமூக வலைதளங்கள் மூலம் பரப்புவது...

இதில், ஆளும்தரப்பு, கிறிஸ்தவ மதத்தினரை மட்டுமே குறி வைத்து அரசியல் பரப்புரை செய்கிறது என்று யாரும் கருத வேண்டாம். அவர்களுக்கு இது, ஒரே கல்லில் இரண்டு மாங்காய். முக்கியமாக, முன்னாள் ஜனாதிபதி கோட்டா ராஜபக்சாவை விசாரணை வளையத்திற்குள்ளாவது கொண்டுவர முடிந்தால், அதனை தங்களுக்குச் சாதகமாக பயன்படுத்தி, மொட்டு கட்சியின் மீளெழுச்சியை எப்போதைக்கும் இல்லாமல் ஆக்கலாம்.

இதற்குக் காரணம் இருக்கிறது. வழமையாக மூன்று சதவீத வாக்குகளே பெற்றுவந்த ஜேவிபி தரப்பினர் கடந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் பெற்ற வாக்குகளில் பெரும்பான்மை மகிந்த ராஜபக்சவின் நிலையான வாக்கு வங்கியாக அண்மைக் காலம்வரை இருந்து வந்தது. அது எங்கே தங்களை விட்டு போய்விடுமோ என்ற அச்சம் ஆளும் தரப்பினரின் உள்ளே இருக்கிறது.

அதிலும் குறிப்பாக அடுத்த தலைமுறைத் தலைவர் என்று எதிர் கட்சியினரிடையே இளைஞரான நாமல் ராஜபக்ச மட்டுமே உள்ள தருணத்தில், ஆளும் தரப்பு அசால்டாக இருந்துவிட முடியாது. எனவே, மொட்டு கட்சியின் வாக்கு வங்கியை குறிவைத்து, கோட்டவிற்கு எதிரான நகர்வுகள் அவசியமாகின்றன.

அது மட்டுமல்ல. தங்களுக்கு ஆட்சிப் பொறுப்பை கொடுத்தால், வானத்தை வில்லாக வளைப்போம், மணலை கயிறாக திரிப்போம் என்றெல்லாம் மக்களின் எதிர்பார்ப்புகளை எக்கசக்கமாக தற்போதைய ஆளும் தரப்பு எகிறவிட்டது. ஆனால், அநுர அரசினால் மக்களின் பொருளாதார நிலைமையை மேம்படுத்த இது வரையிலும் முடியவில்லை. அடுத்தகட்ட நடவடிக்கைகள் என்ன என்பது குறித்தும் அவர்களுக்கு எந்த யோசனையும், உத்தியும் இருப்பதாகத் தெரியவில்லை.

சித்திரைப் புத்தாண்டுக் காலத்தில், சில பொருளாதார வல்லுநர்கள் எச்சரிக்கை செய்தது போல், அரிசி, தேங்காய், ஏன், உப்பு உள்ளிட்ட அத்தியாவசிய பண்டங்களின் தட்டுப்பாடு ஏற்படவில்லை. ஆனால், விலைவாசி எப்போதும் இல்லாத அளவிற்கு

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

காலைக்கதிர் Kalaikkathir

# மதங்களின்..........

4ம் பக்கத் தொடர்ச்சி...........

உச்சத்தை தொட்டுவிட்டு, மேலும் கூரையை



கிழித்துக்கொண்டு மேலே, மேலே போய்க்கொண்டே இருக்கிறது. கடல் சூழ்ந்துள்ள ஒரு நாட்டில் ஏன் உப்புத் தட்டுப்பாடு? என்ற கேள்வியை யாரும் எழுப்புவதில்லை. அதற்கான பதிலையும் யாரும் தயாராக வைத்திருப்பதில்லை.

தங்களது அன்றாட பிரச்சினைகளில் இருந்து மக்களை திசைதிருப்ப வேண்டும். அதேசமயம், தங்களது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றியதாகவும் பரப்புரை செய்யவேண்டும். இவைதானே, ஈஸ்டர் தீவிரவாத தாக்குதல்கள் குறித்து புது விசாரணையும், அதனை ஒட்டிய செய்திகளும் தெரிவிக்கும் தகவல்.

## பழைய பல்லவி

இன்னும் சொல்லப்போனால், ஈஸ்டர் தாக்குதல் விசாரணை குறித்து ஜனாதிபதி அநுரவும் அமைச்சர் நளிந்த ஜயதிசாவும் அன்றாடம் தேர்தல் கூட்டங்களிலும் பத்திரிகையாளர் சந்திப்புகளிலும் வெளியிடும் செய்திகளும், கருத்துகளும் அவர்கள்தான் விசாரணை அதிகாரிகளோ என்ற சந்தேகத்தைக் கிளப்புகிறது. அவர்களுக்கு ஏற்றற்போல், கத்தோலிக்க திருசபை பேச்சாளர்கள் தெரிவிக்கும் கருத்தும் இருக்கிறது.

குறிப்பாக, ஈஸ்டர் தாக்குதல்களுக்கு மூளையாக இருந்து செயல்பட்டவர்களைப் புதிய விசாரணை அடையாளம் காட்டவேண்டும் என்று திருச்சபை தரப்பினர் கோரி வருகின்றனர். அதாவது, தற்போது, தாக்குதல்சம்பவங்களுக்கு மூளையான இருந்ததாக என்ற அமெரிக்க புலனாய்வு நிறுவனமான எப்.பி.ஐ. அடையாளம் காட்டிய சஹ்ரானுக்கும் அப்பால் ஒருவரோ பலரோ இருந்தார்கள் என்ற விதத்தில், திருச்சபையின் ஊடக பேச்சாளர்கள் கருத்து தெரிவித்து வருகிறார்கள். ஆனால், அவர்களுக்கு இது குறித்து மேலதிகமாக ஏதாவது தெரியும் என்றால், அவை குறித்து, பொலிஸ் விசாரணை குழுவினிடம் இப்போதோ, எப்போதோ பகிர்ந்ததாக செய்திகள் இல்லை. என்றாலும், கடந்தகால பொலிஸ் விசாரணைகளில் நம்பிக்கை இல்லை என்ற ஒரே பாடலை அவர்கள் தொடர்ந்து பாடி வருகிறார்கள்.

அப்படியென்றால், யாரோ ஒருவரோ, பலரோ கைது செய்யப்படும் வரை தென்னிலங்கை கத்தோலிக்க திருச்சபை ஓயப்போவதில்லை என்று தோன்றுகிறது. இந்த ஓர் உணர்வுபூர்வமான அணுகுமுறையை, இந்த அரசு தரப்பும் அரசியல் ரீதியாக, எதிர்வரும் தேர்தலில் அறுவடை செய்ய முயல்கிறதோ, என்ற கேள்வி எழுகிறது.

காரணம், ஈஸ்டர் தாக்குதல் நடந்த கடந்த ஆறு ஆண்டுகளில் அடுத்தடுத்து அரசேறிய தலைவர்களும் இதையேதான் சொன்னார்கள், செய்தார்கள். ஆனால், கத்தோலிக்கத் திருச்சபையும், கொழும்பு பேராயர் வணக்கத்திற்குரிய மால்கம் கர்தினால் ரஞ்சித்தும் பழைய பல்லவியையேதான் தொடர்ந்தும் பாடி வந்திருக்கிறார்கள். அடுத்தடுத்து வந்த அரச தலைமைகளும் அது தொடர்பாக அறிக்கைகள் கொடுத்து வந்துள்ளன.

## நம்பிக்கை சார்ந்த விடயம்

ஆளும் கட்சியின் மதம் சார்ந்த தேர்தல் அரசியலில் ஒரு பகுதியாக தலைநகர் கொழும்பு மேயர் பதவிக்கு போட்டியிடும் விராஜ் கெல்லி பால்தஸார் அம்மையாரின் உத்தியை கூறலாம். அண்மையில், இந்து மதத்தை சார்ந்த தெய்வீக புருடர் சத்யசாயி பாபாவின் பதினான்காவது நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இலங்கையில், இந்துக்கடவுளரான விநாயகர் மற்றும் மஹாவிஷ்ணு ஆகியோருக்கு புத்த விகாரைகளில் தனித்தனி சன்னதிகள் உண்டு. அந்த அளவிற்கு மதத்தாலேயே ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள் இல்லையென்றாலும், சத்யசாயி பாபா மற்றும் ஸ்ரீஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் ஆகியோருக்கு குறிப்பாக சிங்கள மேல்தட்டை சார்ந்த பலர் பக்தர்களாக இருக்கிறார்கள். அவர்களைத் தொடர்ந்து, பிற சிங்கள -பௌத்த மக்களில் பலரும் பக்தர்களாகி உள்ளனர்.

அந்த வகையில், சத்யசாயி பாபாவின் நினைவ தினத்தை அனுஷ்டிக்கும் ஒரு நிகழ்வில், ஆளும் தரப்பின் கொழும்பு மேயர் வேட்பாளரும் கலந்து கொண்டிருக்கிறார். அது அவரது தனிநபர் நம்பிக்கை சார்ந்த விடயம் என்று ஒதுக்கிவிட முடியவில்லை. காரணம், கெல்லி அம்மையாருடன் அவரது துணை மேயர் வேட்பாளர் மற்றும் கட்சி தொண்டர்கள் பலரும் அந்த நினைவேந்தல் நிகழ்வில் பங்குபெற்றிருந்தனர் என்று பத்திரிகைச் செய்திகள் கூறின.

அந்துப் பத்திரிகை செய்திகள் கோடிட்டுக்காட்டிய மற்றொரு விடயம், ஜேவிவி மேயர் வேட்பாளரும் அவரது பட்டாளமும், அந்த நிகழ்வில் தேர்தலை மனதில் நிறுத்தியே பங்கேற்றார்கள் என்ற விவரம் அல்லது விளக்கம். இவர்கள்தான், மத -இன பேதமற்ற அரசை அர்பணிப்போடு அளிக்கப் போகிறார்கள், போங்கள்!



# பழுதடைந்த முட்டை விற்பனை வவுனியாவில் திடீர் சுற்றி வளைப்பு



வவுனியா, பட்டாணிச்சூர் பகுதியில் உள்ள முட்டை விற்பனை நிலையத்தில் பாடசாலை உட்பட பலருக்கு பழுதடைந்த முட்டை விற்பனை செய்ததாக கிடைத்த முறைப்பாட்டையடுத்து சுகாதார பரிசோதகர்கள் திடீர் சோதனை நடவடிக்கையை புதன்கிழமை மாலை மேற்கொண்டனர்.

இதன்போது பொதுச் சுகாதார பரிசோதகர்களால் பல ஆயிரத்திற்கும் மேற்பட்ட முட்டைகளும் மீட்கப்பட்டு



கொண்டு செல்லப்பட்டன.

வவுனியா, பட்டாணிச்சூர் பகுதியில் இயங்கி வரும் முட்டை விற்பனை நிலையத்தில் இருந்து பாடசாலை மற்றும் பொது மக்களுக்கு வழங்கப்பட்ட முட்டைகள் பழுதைடைந்த நிலையில் காணப்பட்டதாக வவுனியா பொது சுகாதர பரிசோதகர்களுக்கு கிடைத்த 3 முறைப்பாடுகளையடுத்து குறித்த வர்த்தக நிலையம் மீது சோதனை நடத்தப்பட்டது.

இதன்போது பாவனைக்கு உதவாத முறையில் முட்டை விற்னை செய்ததாக குறித்தவர்த்தகநிலையத்திற்குஎதிராகவழக்கு பதிவு செய்யப்பட்டதுடன், அதிகளவிலான முட்டைகளும் பொது சுகாதார பரிசோதகர்களால் கைப்பற்றப்பட்டன. 100

# இடியுடன் பலத்த மழையால் மரம் முறிந்து வீழ்ந்ததில் வீடுகளுக்குப் பலத்த சேதம்

(ஹஸ்பர்)



கனமழையுடன் கூடிய பலத்த காற்றால் நேற்று (வியாழக்கிழமை) தம்பலகாமம் பகுதியில் வீடுகளுக்கு சேதம் விளைவிக்கப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை மாவட்ட தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியின்தம்பலகாமம்கிராமசேவகர் பிரிவே இவ்வாறு அனர்த்தத்துக்கு இலக்காகியுள்ளது.

இதன் காரணமாக தென்னை மரம் முறிந்து வீட்டின்மீது வீழ்ந்ததில் வீட்டு கூரை உள்ளிட்ட வீட்டு உபகரணங்களும் சேதமாக்கப்பட்டுள்ளன என வீட்டு உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர். மற்றும் கனமழை காரணமாக வீடுகளுக்குள் வெள்ளம்புகுந்ததால்அன்றாடவாழ்வாதார நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளதாக கவலை தெரிவிக்கின்றனர்.

# வாகன வருமான வரிப்பத்திரம் வழங்கல் மே 5, 6 இடைநிறுத்தம்

(அபு அலா)

கிழக்கு மாகாண மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தால் வழங்கப்பட்டு வருகிற வாகன வருமான வரிப் பத்திரம் வழங்கும் கருமபீட சேவை செயற்பாடுகள் இம்மாதம் 5 ஆம் மற்றும் 6 ஆம் திகதிகளில் இடம்பெறமாட்டாதென்று கிழக்கு மாகாண மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள மாகாண ஆணையாளர் திருமதி த.வருணி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலையொட்டி குறித்த இரு தினங்களில், கிழக்கு மாகாண தலைமைக் கருமபீடம் உட்பட மாகாணத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் இயங்கி வருகின்ற கருமபீடங்கள் யாவும் மூடப்படவிருப்பதால், வாகன வருமான வரிப் பத்திரம் வழங்கும் சேவைகள் இடம்பெறமாட்டாதென்றும், அதன் பின்னர் 7 ஆம் திகதி இச்சேவை வழமை போன்று இடம்பெறுமென கிழக்கு மாகாண மோட்டார் போக்குவரத்து திணைக்கள மாகாண ஆணையாளர் திருமதி த.வருணி பொதுமக்களுக்கு அறிவித்தல் வழங்கியுள்ளார்.

# மட்டக்களப்பு பிறைந்துறைச்சேனை சாதுலியாவில் வெளிவிரி மதிப்பீடு

(பர்ஸான்)

மட்டக்களப்பு மத்தி வலயக் கல்வி அலுவலகத்துக்குட்பட்ட பாடசாலைகளில் வெளிவாரி மதிப்பீட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்தவகையில், கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கல்விக் கோட்டத்திற்குட்பட்ட பிறைந்துறைச்சேனை சாதுலியா வித்தியாலயத்தில் வெளிவாரி மதிப்பீடு செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

மட்டக்களப்பு மத்தி வலயக் கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளரும் கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கோட்டக் கல்விப் பணிப்பாளருமான ஏ.எம்.எம்.தாஹிர் தலைமையில் மதிப்பீடு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது, கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் மற்றும் சுற்றுச்சூழல், புறக்கிருத்திய செயற்பாடுகள் போன்றவை அவதானிக்கப்பட்டதுடன், ஆசிரியர்களுக்கு மேலதிக நடவடிக்கைகளைமேற்கொள்ளஆலோசனைகளும்வழங்கப்பட்டன.

பாடசாலையில்மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டு அறிக்கையினை கோறளைப்பற்று மேற்கு கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.எம்.தாஹிர் பாடசாலையின் அதிபர் எம்.எல்.நிஜாம்தீனிடம் வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.







# கல்முனை கார்மேல் பாத்திமா கல்லூரியில் இருந்து பல்கலைக்கு தெரிவான மாணவர்கள் கௌரவிப்பு

(நூருல் ஹுதா உமர்)

வெளியான க.பொ.த உயர்தர (2024) பரீட்சை பெறுபெறுகளின் அடிப்படையில் கல்முனை கல்வி வலய கல்முனை கார்மேல் பாத்திமா கல்லூரியிலிருந்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்படவுள்ளமாணவர்களைபாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலையின் அதிபர் அருட். சகோ. ச. இ. றெஜினோல்ட் தலைமையில் புதன்கிழமை காலை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்படவுள்ள மாணவர்களை மாணவத் தலைவர்கள் மாலை அணிவித்து வரவேற்றதுடன் அதிபர், பிரதி அதிபர்கள், உப அதிபர்கள், பகுதித்தலைவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இணைந்து மாணவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்திருந்ததோடு மாணவர்கள் அவர்களின் அனுபவப் பகிர்வினை கல்லூரியில் கல்வி கற்கும் மாணவர்களுடன் பகிர்ந்துகொண்டனர்.

குறித்த மாணவர்களின் வெற்றிக்கு உறுதுணையாகநின்று உழைத்த ஆசிரியர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதோடு ஆசிரியர்களோடு இணைந்து செயற்பட்ட பிரதி அதிபர்கள், உதவி அதிபர்கள், பகுதித் தலைவர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அனைவருக்கும்நன்றிகளைத் தெரிவிப்பதோடு இரவுபகல் பாராது அனைவரையும் வழி நடத்திய எமது அதிபருக்கும் விசேட நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.





இவ் வெற்றிக்கு பக்கபலமாக நின்ற பழைய மாணவர் சங்க ஐக்கிய இராச்சிய, ஆஸ்திரேலிய கிளைகளுக்கும், எமது பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவிப்பதோடு இவ் பெறுபேற்றை பெற்று தந்த மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் பாடசாலைச் சமூகம் சார்பாக வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம் என பாடசாலை சமூகம் தெரிவித்துள்ளது.

# அரச ஊழியர்களுக்கு என்றுமில்லாதவாறு சம்பள அதிகரிப்பு; உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா பட்டதாரிகள் பாராட்டு

(அஸ்லம் எஸ்.மௌலானா)

அரச ஊழியர்களுக்கு வரலாற்றில் என்றுமில்லாதவாறு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சம்பள அதிகரிப்பை

வழங்கியிருப்பதாக குறிப்பிட்டுள்ள இலங்கை உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா பட்டதாரிகள் தொழிற்சங்கம், அதற்காக ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கு நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துள்ளது.

தொழில்ரீதியாகதகுதிவாய்ந்த இலங்கை உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா பட்டதாரிகள் தொழிற்சங்கம் மே தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் மாநாடு

நேற்று (வியாழக்கிழமை) கல்முனை மயோன் பிளாஸா மண்டபத்தில் அதன் தலைவர் ஏ.எம்.நஸீர் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சங்கத்தின் பொதுச் செயலாளர் எம். ஹுஸைன் முபாறக், உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா பட்டதாரிகள் சார்பான 15 அம்சக் கோரிக்கைகளை முன்மொழிந்து உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது குறித்த பட்டதாரிகள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள், அவற்றை மையப்படுத்தி அவர்கள் வேண்டி நிற்கும் தீர்வுகள் குறித்தும் அவர் எடுத்துரைத்தார்.

இந்த நிகழ்வின் ஓர் அம்சமாக மூத்த ஊடகவியலாளர்களான எம்.ஐ. சம்சுதீன் மற்றும் எம். சஹாப்தீன் ஆகியோரின் உன்னதமான ஊடக சேவைக்காக அவர்கள் இருவரும் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் இத்தொழிற் சங்கத்தின் நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.



# மீரா பாளிகா தேசிய பாடசாலையில் 76 மாணவர்கள் பல்கலைக் கழகத்திற்கு தெரிவாவதற்கான வாய்ப்பு

(றமீஸ்)

இம்முறை வெளியாகிய கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளுக்கமைவாக காத்தான்குடி மீராபாலிகாமகாவித்தியாலயமாணவர்கள்சிறந்த பெறுபேறுகளைப் பெற்று சாதனை படைத்துள்ளனர் என கல்லூரி அதிபர் மௌலவி யூ.எல்.மன்சூர் தெரிவித்தார்.

இதற்கமைவாக, 76 மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாவதற்கான வாய்ப்பினைப் பெற்றுள்ளனர். மருத்துவ பீடத்திற்காக எட்டு மாணவர்களும், உயிரியல் விஞ்ஞானப் பிரிவிற்கு 18 மாணவர்களும், பௌதீக விஞ்ஞானப் பிரிவிற்கு 02 மாணவர்களும், வர்த்தக முகாமைத்துவ பீடத்திற்காக 21 மாணவர்களும், சட்ட பீடத்திற்கு 03 மாணவர்களும், கலைப் பீடத்திற்கு 24 மாணவர்களும் தமது கற்கை நெறியினை தொடர்வதற்கான சந்தர்ப்பத்தினை எட்டியுள்ளனர்.

இதேவேளை, இப்பாடசாலை மாணவர்கள் மாவட்ட மட்டத்தில் தமது திறமைகளின் அடிப்படையில் சிறந்த பெறுபேறுகளையும் பெற்றுள்ளனர். குறிப்பாக இப்பாடசாலை மாணவர் ஒருவர் வர்த்தகப் பிரிவில் மாவட்ட மட்டத்தில் முதல் நிலையையும், உயிரியல் மற்றும் கலைப் பிரிவில் மாவட்ட மட்டத்தில் நான்காம் நிலையையும் அடைந்துள்ளனர்.

இப்பரீட்சையில் சித்தி பெற்று பாடசாலைக்கு புகழை ஈட்டிய மாணவர்களுக்கும், மாணவர்களை வழிப்படுத்திய ஆசிரியர்கள், பெற்றோர்கள், பாடசாலை நிருவாகத்தினர், பாடசாலை அபிவிருத்திக் குழுவினர், பழைய மாணவர் சங்கத்தினர், பாடசாலைச் சமூகத்தினர் போன்றோருக்கு தனது நன்றியறிதலை தெரிவிப்பதாகவும் கல்லூரியின் அதிபர் மௌலவி யூ.எல்.மன்சூர் மேலும் தெரிவித்தார்.

# உள்ளூராட்சிமன்ற தேர்தலில் சஜித்தின் கரங்களை நாம் பலப்படுத்த வேண்டும்

## திகாம்பரம் எம்.பி தெரிவிப்பு



சஜித் பிரேமதாஸ ஜனாதிபதியாகி இருந்தால் மலையக மக்களின் வாழ்வு மேம்பட்டிருக்கும். எனவே, உள்ளூராட்சிசபைத் தேர்தல் ஊடாக அவரின் கரங்களை நாம்பலப்படுத்த வேண்டும்.

-இவ்வாறு தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

தலவாக்கலையில் நேற்று (வியாழக்கிழமை) நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தமிழ் முற்போக்கு கூட்டணி ஆகியன இணைந்து நடத்திய மே தினக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு -

கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது உண்மையை சொல்லியே சஜித் வாக்கு கேட்டார். பொய்களை கூறியே அநுர வாக்கு கேட்டார். இறுதியில் பொய்தான் வென்றது. எனினும், இன்னும் ஒரு வருடத்தில் இந்த அரசாங்கம் ஆட்டம் காணும்.

உள்ளூராட்சிசபைத் தேர்தலுக்கு இன்னும் ஐந்து நாள்களே உள்ளன. அத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியை வெற்றிபெற வைக்கவும். 6 ஆம் திகதி காலைவேளையிலேயே சென்று தொலைபேசி சின்னத்துக்கு வாக்களிக்கவும்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது சஜித் ஜனாதிபதி ஆகி இருந்தால் மலையக மக்கள் வாழ்வில் மாற்றம் வந்திருக்கும். எதிர்க்கட்சியில் இருந்தபோது மலையக மக்கள் தொடர்பில் அநுரகூறிய விடயங்கள் நிறைவேற்றப்படவில்லை. - என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# மலையக மக்கள் தொடர்பில் வழங்கிய வாக்குறுதிகளை அநுரகுமார திஸாநாயக்க இன்னும் நிறைவேற்றவில்லை

## இராதாகிருஷ்ணன் எம்.பி. தெரிவிப்பு

தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் உட்பட மலையக மக்கள் தொடர்பில் வழங்கிய வாக்குறுதிகளை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இன்னும் நிறைவேற்றவில்லை. ஏமாற்றுவித்தையாகவே எரிபொருள் விலை குறைக்கப்பட்டுள்ளது என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வீ. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.



தலவாக்கலையில் நேற்று (வியாழக்கிழமை) நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தமிழ் முற்போக்கு கூட்டணி ஆகியன இணைந்து நடத்திய மே தினக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு -

தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரத்து 700 ரூபா வழங்கப்படும் என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இ.தொ.காவினருடன் இணைந்து அறிவித்தார். ஆனால் இதுவரையில் ஆயிரத்து 700 ரூபா கிடைக்கவில்லை.



இந்நிலையில் ஆயிரத்து 700 ரூபா பற்றி பேசப்படும் என தற்போதைய ஜனாதிபதி கூறுகின்றார். அது எப்போது கைகூடும் என்பது தெரியவில்லை. இன்று பொருள்களின் விலைகள் எகிறியுள்ளன. இதனால் தோட்டத் தொழிலாளர்களுக்கு சமாளிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது நுவரெலியா மாவட்ட மக்கள் சஜித் பிரேமதாஸவுக்கு பேராதரவு வழங்கினார்கள். நாம் என்றும் மக்களுடன்தான் இருப்போம்.

மலையக மக்கள் தொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அதிகம் பேசினார். ஆனால் எதுவும் நடக்கவில்லை. உகண்டாவில் உள்ள ராஜபக்ஷக்களின் பணம் கொண்டுவரப்படும் என்றார்கள். அதுவும் நடக்கவில்லை. தேர்தல் நெருங்கும்வேளை ஏமாற்றுவித்தையாக எரிபொருள் விலை குறைக்கப்பட்டுள்ளது. - என்றார்.

# வவுனியாவில் சுகாதாரப் பரிசோதகர்களின் கடமைக்கு ஊறுவிளைவித்த இருவர் கைது

வவுனியா நகரத்தில் சுகாதாரப் பரிசோதகரின் கடமைக்கு இடையூறு விளைவித்த இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிசார் நேற்று தெரிவித்தனர்.



வவுனியாயாழ்வீதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் வாகனம் ஒன்றில் வந்த இருவர் உணவுப்பொருள்களை விற்பனை செய்துள்ளனர்.



குறித்த வாகனத்தை சுகாதார பரிசோதர்கள் பரிசோதனை செய்ய முற்பட்ட போது விற்பனையாளர்களால் அவர்களின் கட மைக்கு இடையூறு ஏற்படுத்தப்பட்டது. இதனால் அந்த பகுதியில் சற்றுநேரம் குழப்பநிலைஏற்பட்டது.

எரிபொருள் நிரப்பு நிலையத்தின் அருகில் தின்பண்டங்களை விற்பனை செய்வதால், உணவில் நச்சுவாயுக்கள் கலக்கும் சந்தர்ப்பம் ஏற்படுவதுடன் அந்தபகுதியில் கழிவுநீர் வழிந்தோடும்கால்வாயும் காணப்படுகின்றது. எனவே, இவ் வாகனத்தை வேறு பகுதிக்கு எடுத்துச்சென்று அங்கே விற்பனை செய்யுமாறு சுகாதாரபரிசோதகர்களால் தெரிவிக்கப்பட்ட போதும் விற்பனையாளர்கள் அதனை ஏற்க மறுத்தனர்.

இதனை அடுத்து சுகாதாரபரிசோதகர்களால் வவுனியா பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு வருகைதந்த பொலிசார் குறித்த இருவரினையும் கைது செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. 100

# 3 நாள் சாரணர் பயிற்சி பாசறை

(றிபாஸ்)

அக்கரைப்பற்று, கல்முனை மாவட்ட சாரண சங்கத்தின் வருடாந்த சாரணர் பயிற்சி பாசறை அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்தில் இடம் பெற்றது.

முன்னாள் வலயக் கல்வி பணிப்பாளரும் மாவட்ட சாரண ஆணையாளரகவுமிருந்த யூ.எல். எம்.ஹாசிமின் வழிகாட்டலின் கீழ் மாவட்ட சாரண ஆணையாளர் எம்.ஐ. உதுமாலெப்பையின் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை 25 ஆம் திகதி தொடக்கம் 27ஆம் திகதி வரை மிக சிறப்பாக இடம்பெற்றது.

இப்பயிற்சி பாசறைக்கு மாவட்டத்திலுள்ள சகல பாடசாலைகளிலுமிருந்து எட்டு நூறுக்கு மேற்பட்ட ஆண், பெண் சாரணர்கள் கலந்து கொண்டு பயிற்சிகளைப் பெற்றுள்ளதுடன். முதல் நாள் நிகழ்வில் அக்கரைப்பற்று, திருக்கோவில் வலயக்கல்விப்பணிப்பாளர்கள், பாதுகாப்பு படையின் உயர் அதிகாரிகள், சங்கத்தின் தவிசாளர், தலைவர், செயலாளர் உட்பட உதவி மாவட்ட சாரண ஆணையாளர்கள், கல்வியலாளர்கள், அதிபர்கள் ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

மூன்று நாள்களாக நடைபெற்ற இப் பயிற்சி பாசறையில் தமிழ், முஸ்லிம், சாரணர்கள் ஒன்றாக தங்கியிருந்ததுடன் இவர்களுக்கிடையில் இன நல்லிணக்கம், புரிந்துணர்வு, பரஸ்பரம், ஒற்றுமை, சகோதரத்துவவும் ஏற்படுவதற்கும் இவ்வாறான பாசறைகள் வழிவகுக்கும் என ஊடகத்துக்கு பொறுப்பான உதவி மாவட்ட சாரண ஆணையாளரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான எம்.எப். றிபாஸ் தெரிவித்துள்ளார்.









உ
முருகன் துணை

## நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்வழி நயனம்

## கோலமிடல்

சைவத் தமிழ் மக்களின் கலாசாரத்தில் கோலமிடல் முக்கிய பங்கு கொண்டுள்ளது.சிறப்பாக கடும் பனி பொழியும் மார்கழி மாதத்தில் பெண்கள் அதிகாலையில் ஸ்நானம் செய்து, நெற்றியில் நீறணிந்து திலகமிட்டு, தூய்மையான ஆடை அணிந்து, தலையின் ஈரம் நீங்கத் தூய துணியினை கொண்டை முடியினைச் சுற்றிக் கட்டி, பதிகம் பாடி சாணத்தால் மெழுகிய வீட்டு வாசலில் கோலமிடும் அழகு கண்கொள்ளாக் காட்சியாகும்.

அதே போன்று அவர்கள் அமைக்கும் கோலமும் அழகானது.

ஆனால் கோலம் அலங்காரத்துக்காகவோ அழகுக்காகவோ நம் முன்னோரால் போடப்பவில்லை என்பதையும். அங்கே ஆழ்ந்த அறிவியல் தத்துவம் அடங்கி உள்ளதையும் தெளிந்து கொள்ளல் வேண்டும்.

கோலமிடலில் ஒருவிதமான வடிவப் படைப்பு அமைப்பினைக் காணக் கூடியதாக இருக்கும்.அங்கே பல்வேறுவிதமான வடிவங்கள் ஒன்றிணைப்புப் பெற்றிருக்கும். இது ஒரு வகையில் இயந்திரம் என்ற சிந்தனையுள்ளும் அடங்கக் கூடியது.

சரியான முறையிலான, உருவங்கள் அல்லது வடிவங்களின் ஒன்றிணைவு யந்திரம் என்று அடையாளம் கொள்கின்றது. இந்தப் பிரபஞ்சம் கூட சூரியன் சந்திரன்,பூமி மற்றும் ஏனைய கோள்கள் போன்ற பலவிதமான உருவங்களால் ஒன்றிணைந்த இயந்திரமே.

அங்கே ஒரு இயக்கம் தொழிற்படும்.அதனைக் கண்ணால் தெளிவாகக் காண முடியாதிருக்கலாம்.ஆனால் உணர்ந்து கொள்ள முடியும்.

கோலத்தையும் அவ்வாறான ஒரு இயந்திரமாகவே உருவாக்கினர்.அங்கும் இயக்கத்தை ஏற்படுத்திக் கொண்டனர்.அதனையும் உணர்வினாலேயே அறிந்து கொள்ள முடியும்.(அது கட்டுரையின் போக்கில் தெளிவாகும்.)

இப்போது கோலத்தை ஒரு அலங்கார உருவமாகப் பார்க்கின்றனர்.தகர உருளையில் பொடியை இட்டு உருட்டி கோலங்களைக் காண்கின்றார்கள்.அல்லது ஸ்டிக்கராக கோலத்தை கொள்கின்றார்கள். அங்கும் வடிவங்கள் வருகின்றன. என்றாலும் கோலமிடுவதில் ஒரு வரன்முறை தந்திருக்கின்றார்கள் எம்முன்னோர் என்பதை நாம் நினைவில் கொள்ளல் வேண்டும்.

**கோலம் உருவான வரலாறு**

சைவ மக்கள் தமது பின்பற்றும் பழக்க வழக்கங்களும் நடைமுறைகளும் அவர்களது வாழ்வியல் ஓட்டத்தில் கற்றுக் கொண்ட அனுபவங்களூடே பெறப்பட்ட நல்ல அம்சங்களேயாகும் என்பர் சமூக அறிஞர்கள்..இந்த வரிசையில் கோலமிடலும் அடங்குகின்றது.

வேதகாலத்தில் சமய கிரிகைகளின் போது பூரண கும்பம்,பால்குடம்,விளக்கு, ஆகியவற்றைப் பயன்படுத்தும்போது அவற்றை தனித்தனி கட்டங்களை வரைந்து அக்கூட்டுக்குள் அரிசி மாவு,மஞ்சள் பொடி,குங்குமம் கொண்டு நிரப்பி, அதற்குள் வைத்துக் கொண்டார்கள்.

அக்கினி வளர்க்க ஒன்பது குழிகள் அமைத்து குண்டங்களை ஏற்பாடு செய்தும் கொண்டனர்.பின் அவற்றை இணைக்க கோடு இட்டுக் கொண்டனர்.அதுவே பிற்காலத்தில் புள்ளிக் கோலம் ஆனது.

இறைவனின் அருட்சக்தியினை ஈர்த்துக் கொள்ள அவருக்கான சக்திமிகு யந்திரங்களை கோலங்களாக முன்னோர் தந்துள்ளனர்.மேலும் தீய சக்திகளை கட்டுப்படுத்தவும் அழிக்கவும் கோலமிட்டு பூசைகள் செய்துகொண்டனர்.

இந்தவகையில் சைவசமய வழிபாட்டிலும்,கிரிகைகளிலும்,பண்டிகைகளிலும் கோலங்கள் முக்கியம் பெற்றுக் கொண்டன.சைவ சமயத்தவர்களின் சமூக அடையாளங்களில் ஒன்றாகக் கோலங்கள் அன்று தொட்டு இன்றுவரை முதன்மை பெற்று வரகின்றன.

**கோலங்கள்- வழக்கங்களும் வகைகளும்.**

கோலங்கள் இடத்துக்கிடம் வேறு வேறு சிறப்புப் பெயர்களைக் கொண்டு அழைக்கப் படுவதுடன் கோலமிடும் முறையிலும் வேறுபாடுகள் கொண்டு வேறு பெயர்களிலும் சுட்டப் படுகின்றன.

நிறப்பொடிகளைத் தூவி இடப்படும் வண்ணக் கோலங்கள் 'ரங்கோலி' கோலங்கள் எனப்படுபவை வட இந்தியக் கலாசார வழக்கமாகும்

மலர்களைக் கொண்டு அமைக்கப் படுவன 'மலர்க் கோலம்' எனப்படுபவை இந்தியாவின் கேரளத்தின் சிறப்பான அம்சமாகும்.

சில பகுதிகளில் தானியங்கள் கொண்டு இடப்படும் 'தானியக் கோலம்' எனப்படுபவையும் அடையாளப் படுத்தப் படக்கூடியவை.

சைவத் தமிழர் வழக்கத்தில் சிறப்புற்றது 'புள்ளிக் கோலம்' என்று சிறப்புப் பெயர் கொண்டுள்ளது. இது தென் இந்தியாவில் தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் சிறப்பாக இடப்படும் கோலமாகும். அரிசிப் பொடி,சுண்ணாம்புக் கற்பொடி,மஞ்சள் பொடி,செங்கற் பொடி,ஊற வைத்து அரைத்த பச்சை மாவு போன்றவற்றால் இக்கோலங்கள் இடப்படுகின்றன.

இங்கே உயர்ந்த மனிதாபிமான சித்தனையும்,அறிவியற் சிந்தனையும் சைவத் தமிழர் பாரம்பரிய நடைமுறையுடன் இணைந்திருப்பதை அவதானத்தில் கொள்ளல் வேண்டும். ஊறவைத்த பச்சை மாவு சிற்றுயிர்களுக்கு உணவாகின்றது.கருணை மிகு காருண்யா சமூக சிந்தனை அதுவன்றோ! மஞ்சள் பொடி தொற்று நீக்கியாகத் தொழிற்பட வல்லது.இவ்வாறாக எம்முன்னோரின் வாழ்வியல் நடைமுறைகள் உயர்ந்த விழுமியப் பின்னணிகள் கொண்டிருப்பதை உணர்ந்து கொள்ளவேண்டும்.

புள்ளிக் கோலங்கள் குறிப்பிட்ட புள்ளிகள் இடப்பட்டு நடுப் புள்ளியில் ஆரம்பித்து புள்ளிகளை இணைத்து வட்ட வடிவமாகவோ அல்லது முக்கோண, சதுர வடிவங்களாகவோ வரையப்படும். புள்ளிகள் இட்டு அந்தப் புள்ளிகளில் தொடாது அவற்றுக்கிடையால் வளைத்து நெளித்து வரையப்படுவது 'கம்பிக் கோலம்' எனப்படும்.இதுவும் புள்ளிக் கோல வகையது. ஆலய மண்டபங்களில் பெரும்பாலும் இடப்படும்.

இத்தகைய கோலங்களின் வடிவங்களில் ஒருவகை நேர்த்தியும் அழகியல் கட்டுப்பாடும் மிக்கிருக்கும். மனதுக்கு மகிழ்வைத் தரும்.

புள்ளிக் கோலங்களின் நடுப் புள்ளியில் மாட்டுச் சாணத்தில் பிள்ளையார் வடிவமைத்து அதில் பூசனிப் பூ வைப்பது வழக்கம்.

கோலமிடும்போது அவதானத்தில் கொள்ளவேண்டியவை.

–தூய்மை பேணப்படவேண்டும்.

–சூரிய உதயத்தின் முன்னர் கோலமிடல் வேண்டும்.

–நவக்கிரக் கோலமிட்டால் அவற்றால் ஏற்படக்கூடிய தீங்குகள் நீங்கும்.

–ஸ்ரீசக்கரம், ஹிருதய கமலம் கோலங்களை செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் போடுவதால் செல்வம் பெருகும்.

–சங்கு சக்கரக் கோலங்களை சனிக்கிழமைகளில் போட்டால் வீடு வளம் பெரும்.

– விஷேட நாட்களில் அரிசி அரைத்த மாவில் கோலமிடல் நன்று.

– கோலமிடும்போது இடது புறமாக இழையை இழுக்கக் கூடாது.

– –கோலத்தை காலால் மிதிக்கவோ அழிக்கவோ கூடாது.

– வாயிற் படிகளில் குறுக்குக் கோடுகள் போடக் கூடாது.நேர்கோடுகளே போடப் படவேண்டும்.

– அமாவாசை மற்றும் முன்னோர் காரியங்கள் ஆற்றும் நாட்களில் வாசலில் கோலம் போடக்கூடாது.

**கோலமிடலின் நன்மைகள்.**

–கோலமிடுபவர்களுக்கு மனம் அமைதியாகி மன லயிப்புத் தோன்றி மகிழ்வைத்தரும்.

–கண்கள்,உடல்,இடுப்பு ஆகியவற்றிற்கு பயிற்சி தரும்.

–மூளைக்கு வேலை தந்து நல்ல பயிற்சி அளிக்கும்.

–கற்பனை வளம் பெருகும்.புதியன புனையும் ஆற்றல் வளரும்.

–உளக்குவிப்பு பயிற்சிக்கு சிறந்தது.

–கோலமிடும்போது குனிந்து நிமிர்வதால் சிறப்பான உடற் பயிற்சியாகின்றது.

–கைகளின் தசை நார்கள் இலகுவாகிக் கொள்கின்றன.

–கோலமிட்ட இடத்தில் ஆரோக்கியம் நிறைந்த புனிதத் தன்மை தோற்றம் பெறும்.

–எமது பண்பாட்டுக் கலாசார பாரம்பரியம் பாதுகாக்கப் படும்.

– வீட்டிற்கு முன்னால் கோலமிடுவதால் இலட்சுமி தேவி வரவேற்கப் படுவார்.இலட்சுமி கடாட்ஷம் அங்கே பெருகும்.

ஆகவே வீட்டில் கோலமிட்டு அதன் சிறப்பைக் கொண்டாடுவோம்.

ஆதிரன்
அவுஸ்திரேலியா.






காலைக்கதிர் Kalaikkathir

# ஊடகவியலாளர்களின் பெரும் பங்களிப்பின் ஊடாகவே எமது தொழிற்சங்கம் தீர்வுகளை தொழிலாளர்களுக்கு பெற்றெடுத்தது

## அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம் பெருமிதம்

(அஷ்ரப்கான்)

அகில இலங்கை ரீதியாக எங்களுக்கு உதவி செய்த மக்களின் பிரச்சினைகளை வெளியுலகுக்கு கொண்டு வந்த அனைத்து ஊடகவியலாளர்களையும் நாங்கள் இந்த சந்தர்ப்பத்திலே பாராட்டுகின்றோம் என்று அகில இலங்கை அரசாங்கம் பொது ஊழியர் சங்கத்தின் தலைவர் எஸ். லோகநாதன் தெரிவித்தார்.

அகில இலங்கை அரசாங்கப் பொது ஊழியர் சங்கத்தின் 33 ஆவது ஆண்டு மே தின கூட்டம் நேற்று(வியாழக்கிழமை) கல்முனை தமிழர் கலாசார மண்டபத்தில் எளிமையான முறையில் சங்கத்தின் தலைவர் எஸ். லோகநாதன் தலைமையில் நடைபெற்றது.

இங்கு கலந்து கொண்டு உரையாற்றிய சங்கத்தின் தலைவர் எஸ்.லோகநாதன் மேலும் உரையாற்றுகையில் -

அரசாங்க ஊழியர்களுக்கு பத்தாயிரம் ரூபா சம்பள உயர்வு வழங்கியதுடன், அதனை அடிப்படைச் சம்பளத்தில் சேர்த்து வழங்கியுள்ளார்கள். எனவே ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கா அவர்களுக்கு எமது சங்கம் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தொழிலாளர்கள் சார் நலன்கள், விடயங்களில் அக்கறையோடு செயற்படுகின்ற இந்த அரசாங்கம் தொடர்ந்தும் சிறப்பாக நாட்டை முன்னேற்றிச் செல்ல வேண்டும். நமது தொழிலாளர்கள் மிகவும் சிறப்பாக உன்னதமாக வாழ வேண்டும் என்ற விடயத்தில் கரிசனை காட்டுகின்ற அரசாங்கத்துக்கு மக்கள் அனைவரும் இணைந்து ஆதரவு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையும் இங்கு விடுகின்றேன்.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவுக்கு 20 அம்ச கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றினை நாங்கள் இந்த மேதின கோரிக்கையாக அனுப்பி இருக்கின்றோம்

அதில் முக்கியமாக -

அரச சேவையில் பணிபுரிந்து அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03ஃ2016 சுற்றறிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர், அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 06ஃ2006 மற்றும் அதற்குத் திருத்தமாக வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிருபங்களின் கீழ் அடிப்படைச் சம்பளம் பெற்று அரச பணியிலிருந்து ஓய்வுபெற்ற அரச சேவையாளர்கள் இன்றைய பொருளாதார கஷ்டமான சூழ் நிலமையில் குறைவான ஓய்வூதியத்தைப்பெற்று வாழ்ந்துவருகின்றனர்.

இவ்வாறான அரசசேவையாளர்களுக்கு அரசு உதவவேண்டுமெனக் கோரல்.

மற்றும், பயங்கரவாத தடைச்சட்டத்தை இரத்துச் செய்வதற்கும் மற்றும் இச்சட்டத்தால் காணாமல்போனவர்கள், பாதிக்கப்பட்டவர்களுக்கு தாழ்ந்தகாது நியாயத்தைப் பெற்றுக்கொடுக்க வேண்டுமெனக் கோரல் போன்ற 20 அம்ச கோரிக்கைகளை மே தின கோரிக்கையாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளோம். - என்றார்.

இக்கூட்டத்தில் ஊழியர்களின் நலன் மற்றும் தொழிலாளர் நலன் தொடர்பான விசேட உரைகள் இடம்பெற்றன.



இங்கு சங்கத்தின் வளர்ச்சிக்கு பங்காற்றிய ஊடகவியலாளர்கள், சிரேஷ்ட உறுப்பினர்கள் பாராட்டி கௌரவிக்கப்பட்டதுடன் சங்கத்தினுடைய ஊடக இணைப்பாளராக சிரேஷ்ட ஊடகவியலாளர் எஸ்.அஷ்ரப்கான் நியமிக்கப்பட்டார்.






# தொழிலாளர் வர்க்கம் உரிமைக்காக போராடிய நினைவுகளை உயர்த்திப் பிடிக்கும் மே நாள்

## சமூக செயற்பாட்டாளர் உதுமான்கண்டு நாபீர் தெரிவிப்பு

(ஸாகிர்)

உழைக்கும் மக்களின் மகிழ்ச்சியான வாழ்வே எமது இலட்சியமாகும். உழைக்கும் மக்களாகிய உங்கள் அனைவரதும் மகிழ்ச்சியும் நிம்மதியுமான வாழ்வுக்காக நாம் என்றும் ஓயாது பயணிக்கும்.

உழைக்கும் மக்களாகிய உங்கள் அனைவருக்கும் மே தின வாழ்த்துக்களை கூறிக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன் என சமூக செயற்பாட்டாளர் உதுமான்கண்டு நாபீர் தெரிவித்தார்.

சர்வதேச தொழிலாளர் தினம் தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்னர் ஐரோப்பா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா, ரஷ்யா என்று பல தேசங்களிலும் ஆடை மற்றும் இரும்புத் தொழிற்சாலைகள் சார்ந்து பெரும் முதலாளிகள் உருவாகத் தொடங்கினர்.

இந்த முதலாளிகள், கூலித் தொழிலாளர்களைக் கசக்கிப் பிழிந்து ஈவிரக்கமற்ற முறையில் வேலை வாங்கினர். நாள் ஒன்றுக்கு சுமார் 15 மணி நேரத்துக்கும் மேலாக தொழிற்சாலைகளில் மக்கள் அடிமைகளாக வேலை செய்ய வேண்டியிருந்தது.

இந்த நிலைமையை மாற்றுவதற்காக தொழிலாளர்கள் நடத்திய பல்வேறுபட்ட போராட்டங்களின் விளைவாகவே நாளொன்றுக்கு 8 மணி நேர வேலை என்பதை இவ்வுலகம் படிப்படியாக ஏற்றுக் கொண்டது.



இந்த உரிமையை வென்றெடுப்பதற்காக நடத்தப்பட்ட போராட்டங்களும் கைதுகளும் சிறைக் கொடுமைகளும் உயிரிழப்புகளும் சொல்லிமாளாதவை. அந்த நினைவுகளை முன்வைத்தே மே முதல் நாளை தொழிலாளர் தினமாக நாம் அனுஷ்டித்து வருகிறோம். அவைகளெல்லாம் கடந்த நூற்றாண்டு கதைகள். ஆனால் இன்றும் கூட நமது தொழிலாளர் வர்க்கத்தின் உழைப்பு சுரண்டப்படுவது முடிந்த பாடில்லை.

எமது மாகாணத்தை எடுத்துப் பாருங்கள். இங்கு நிறைந்து வாழும் விவசாயிகளும், மீனவர்களும் நாளும் பொழுதும் உழைத்து உழைத்து ஓடாய் தேய்ந்து போகின்றனர். எப்படித்தான் உழைத்தாலும் ஏழ்மை அவர்களை விட்டபாடில்லை.

இதற்கு காரணமென்ன? சுரண்டல், மூலதனத்தைக் கையில் வைத்திருக்கும் முதலாளிகள் எமது மக்களின் உழைப்பை வியாபாரம் எனும் பெயரில் உறுஞ்சிக் கொண்டிருக்கின்றார்கள். அது மீனாக இருக்கலாம். நெல்லாக இருக்கலாம். வெள்ளரிக்காயாக இருக்கலாம். ஆடு, மாடு கோழியாகக் கூட இருக்கலாம். அனைத்தி லும் கொள்ளை இலாபம் தலைவிரித்தாடுகிறது.

வியாபாரம் என்பது எமது மக்களின் கையில் இல்லை. இவை குறித்தெல்லாம் நாம் தீவிரமாக கவனம் கொண்டுள்ளோம். - என்றார்.

# பூஜை வழிபாடுகள்

(கேதீஸ்)

தொழிலாளர் தேசிய சங்கத்தின் 60 ஆவது வருட பூர்த்தியும் மேதின விசேட பூஜை வழிபாடுகள் மற்றும் கொடியேற்றும் நிகழ்வும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் பொதுச்செயலாளர் எஸ்.பிலிப் தலைமையில் நேற்று (வியாழக்கிழமை) ஹற்றன் காரியாலய வளாகத்தில் நடைபெற்றது.







காலைக்கதிர் Kalaikkathir

# ஐக்கிய மக்கள் கூட்டணியினரின் மே தின கூட்டம் தலவாக்கலையில்

(கேதீஸ்)

ஐக்கிய மக்கள் கூட்டணி மற்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணியுடன் இணைந்து நடத்திய மேதின கூட்டம் தலவாக்கலை நகர சபை மைதானத்தில் நேற்று (வியாழக்கிழமை) நடைபெற்றது.

இந்த மேதினக் கூட்டம் ஐக்கிய மக்கள் கூட்டணியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் நடைபெற்றது.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவர்கள் பழனி திகாம்பரம், வி.இராதாகிருஸ்ணன், ஐக்கிய மக்கள் கூட்டணியின் செயலாளர் மத்தும பண்டார மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் திஸ்ஸ அத்தநாயக்க, ஹரிஸ டி சில்வா, சுஜீவ சேனசிங்க, சுஜித் சஞ்சே பெரேரா உள்ளிட்ட பலர் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.












இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.05.2025இல் வெளியிடப்பெற்றது